தமிழ்நாடு அரசு

மூன்றாம் வகுப்பு

இரண்டாம் பருவம்

தொகுதி – 1

தமிழ்

ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – 2019

திருத்திய பதிப்பு – 2020, 2022, 2023, 2025

மறுபதிப்பு – 2021, 2024

(புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019
நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24 × 7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

CHILD LINE 1098 NIGHT & DAY

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?
அழையுங்கள் 14417
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

14417
கல்வித் தகவல் மையம்

3rd_Tamil_Term 2.indd 2 6/12/2025 1:13:55 PM

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும்** அமைந்ததொரு **குடியரசாக நிறுவவும்,**

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல், **நீதி;**

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை;**

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை**

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,

ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

3rd_Tamil_Term 2.indd 3 6/12/2025 1:13:56 PM

முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அ.ிறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்காணும் நோக்கங்களை அடைந்திட பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

3rd_Tamil_Term 2.indd 4 6/12/2025 1:13:57 PM

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!




3rd_Tamil_Term 2.indd 5 6/12/2025 1:13:57 PM

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பாதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும். பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

3rd_Tamil_Term 2.indd 6 6/12/2025 1:13:57 PM



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



3rd_Tamil_Term 2.indd 7 6/12/2025 1:13:58 PM

முன்னுரை

குழந்தைகள் அற்புதமானவர்கள்!

அவர்கள் பல்வேறு சூழல்களிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர். எல்லாக் குழந்தைகளும் தனித்திறன் என்னும் முத்துகளைத் தன்னகத்தே கொண்ட சிப்பிகள். அச்சிப்பிகளுக்குள் பொதிந்து கிடக்கும் திறன்களாகிய முத்துகளைக் கண்டு வெளிக்கொணர்வதே உண்மையான கல்வி.

இதுவரை கற்றுணர்ந்த அடிப்படை மொழித்திறன்களை நினைவுகூர்ந்து வெளிப்படுத்தும் வகையில் '**என் நினைவில்**' என்கிற தலைப்பில் ஆர்வமூட்டும் செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.





இப்பாடநூல் தமிழையும் தமிழர்களையும் போற்றும்வகையில் அமைந்துள்ளதுடன் குழந்தையின் விருப்பம், மனவளர்ச்சி, சமுதாய நோக்கு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் குழந்தைகளின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணப்படங்கள், நற்பண்புகளை வளர்க்கும் கதைகள், படக்கதைகள், இசையோடு ஓசை நயமிக்க இனிய பாடல்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

தங்கள் ஆசிரியர்களோடு குழந்தைகள் தயக்கமின்றிக் கலந்துரையாடுவதற்கான பகுதியாகச் **சிந்தித்துப் பேசலாமா?** பகுதி அமைக்கப்பட்டுள்ளது.



கருத்தை வெளிப்படுத்துவது பேச்சு. எனவே பேச்சுவளத்தை மேம்படுத்தும் சூழல்களும் வழிகாட்டுதலுடன் கூடிய பேசுவதற்கான வாய்ப்புகளும் அதிகம் வழங்கப்பட்டுள்ளன.



3rd_Tamil_Term 2.indd 8 6/12/2025 1:13:59 PM

பாடநூல் பயிற்சிகளாக,

- பாடத்துடன் தொடர்புடைய பயிற்சிகள்
- மொழி விளையாட்டுகள்
- திறன் சார்ந்த பயிற்சிகள்

ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.



ஒவ்வொரு குழந்தையின் படைப்புத்திறன், புதியன உருவாக்கும் சிந்தனை ஆகியவற்றை வளர்க்க உதவும் கலையும் கைவண்ணமும் பகுதி இடம்பெற்றுள்ளது.

திட்டமிட்டு ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க உதவும் செயல்திட்டம் அளிக்கப்பட்டுள்ளது.





புதிய செய்திகளைக் குழந்தைகள் அறிந்துகொள்ள உதவும்வகையில் அறிந்துகொள்வோம் பகுதி அமைந்துள்ளது.

செயல்பாடுகளாக,

- ஆசிரியரோடு இணைந்து கற்கும் பகுதி
- இணைந்து குழுவினராகச் செயல்படும் பகுதி
- தனியே செய்து முடிக்கும் செயல்பாடுகள்
- மதிப்பீட்டுச் செயல்பாடுகளுக்கான பகுதி

ஆகியன இடம்பெற்றுள்ளன.

புதிய பாடநூலில் இவைபோன்ற செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

கற்பிக்கவேண்டிய திறன்கள் அந்தந்தப் பாடப்பகுதியிலும் பெறவேண்டிய கற்றல் விளைவுகள் பாடநூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் பாடப்பகுதிகளில் பேசப்பட்டுள்ளன.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும் இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும் ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த சமூகம் அமையட்டும்.

வாழ்த்துகள்..!

ஆக்கியோர்.

3rd_Tamil_Term 2.indd 9 6/12/2025 1:13:59 PM

தமிழ்

பொருளடக்கம்

வ. எண்	பாடத்தலைப்பு	பக்க எண்	மாதம்
	என் நினைவில்	1	அக்டோபர்
1	நாயும் ஓநாயும்	6	அக்டோபர்
2	நூலகம்	10	அக்டோபர்
3	தூக்கணாங்குருவியும் ஒட்டகச்சிவிங்கியும்	14	நவம்பர்
4	ஏன்? ஏன்?	18	நவம்பர்
5	ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு	20	டிசம்பர்
6	திருக்குறள் கதைகள்	24	டிசம்பர்
	வந்த பாதை	27	டிசம்பர்

மின் நூல்

மதிப்பீடு



3rd_Tamil_Term 2.indd 10 6/12/2025 1:14:03 PM

என் நினைவில்

காட்டில் திருவிழா

காட்டில் திருவிழா நடந்தது. எல்லாரும் மகிழ்ச்சியாக இருந்தனர். பல்வேறு போட்டிகள் நடந்தன. என்னென்ன போட்டிகள் நடந்தன? போட்டியில் கலந்து கொண்டவர்கள் யார் யார்? யாரெல்லாம் வெற்றி பெற்றனர்? பார்ப்போமா?



















3rd_Tamil_Term 2.indd 1 6/12/2025 1:14:06 PM

இவர்களுக்கு என்ன போட்டி நடைபெறுகிறது? எழுதுவோம்





போட்டியில் வென்றவர்கள் பெற்ற பரிசு என்ன? எழுதுவோம்

மலர்கள் பந்து மணி

பட்டம் கிண்ணம் கரும்பு

கட்டெறும்பு 2



கரும்பு

வண்ணத்துப்பூச்சி



மரங்கொத்தி



ஒட்டகம்



பல்லி



சிலந்தி



3rd_Tamil_Term 2.indd 2 6/12/2025 1:14:08 PM

குறிப்புகளைப் பயன்படுத்தி வருணனைத் தொடர்கள் எழுதுவோம்

வண்ண வண்ண, அழகான, உருண்டையான
வெள்ளை வண்ண, மஞ்சள் வண்ண





வண்ண வண்ண மலர்கள்











3rd_Tamil_Term 2.indd 3 6/12/2025 1:14:08 PM

உணவகத்துக்குப் பொருத்தமான அறிவிப்புப்பலகையை இணைப்போம்









கேட்டதும் கிடைக்கும்
கேழ்வரகுக் கூழ்

வாங்க... வாங்க...
பாசிப்பருப்புப் பாயசம்
குடிக்கலாம்

சுக்கு, மல்லித் தேநீர்
சுடச்சுட உள்ளது

இனிப்பான கருப்பட்டிப்
பணியாரம் இங்குக் கிடைக்கும்

சொற்களை இணைத்துத் தொடர்கள் எழுதுவோம்

செம்பருத்தி
மல்லிகை
சூரியகாந்தி
முல்லை

→ மஞ்சள்
சிவப்பு
வெள்ளை

→ வண்ணத்தில் இருக்கிறது

செம்பருத்தி சிவப்பு வண்ணத்தில் இருக்கிறது.

3rd_Tamil_Term 2.indd 4 6/12/2025 1:14:12 PM

எதற்காக, எங்கே செல்ல வேண்டும்? இணைப்போம்

பாதுகாப்பைப் பெற	பேருந்து நிலையம்
கல்வி கற்க	மருத்துவமனை
மருத்துவம் பெற	காவல் நிலையம்
கடிதம் அனுப்ப	பள்ளிக்கூடம்
பயணம் செல்ல	அஞ்சல் நிலையம்

பாடி மகிழ்வோம்



3rd_Tamil_Term 2.indd 5 6/12/2025 1:14:13 PM

1 நாயும் ஓநாயும்

நாயும் ஓநாயும் நண்பர்கள். ஆனால் ஓநாய் காட்டில் இருந்தது. நாய் வீட்டில் இருந்தது. ஒரு நாள் ஓநாயும் நாயும் சந்தித்துக் கொண்டன.

நாய் : என்ன ஓநாயாரே, மெலிந்து இருக்கிறீர்?

ஓநாய் : அப்படியா? அங்குமிங்கும் ஓடி வேட்டையாடுகிறேன். அதனால் மெலிந்து இருக்கிறேன். நீ கொழுகொழு என்று இருக்கிறாய்.

நாய் : மிக்க மகிழ்ச்சி. நான் சொல்கிறபடி செய்தால் நீயும் என்னைப் போல கொழுகொழு என்று இருக்கலாம்.

ஓநாய் : அப்படியா? நான் என்ன செய்ய வேண்டும்?



3rd_Tamil_Term 2.indd 6 6/12/2025 1:14:13 PM

நாய் : புதியவர்கள் யாரேனும் வீட்டிற்கு வந்தால் எச்சரிக்க வேண்டும். அவ்வளவுதான், அந்த வீட்டில் உள்ளவர்கள் நம்மை நன்கு பார்த்துக் கொள்வார்கள்; உணவளிப்பார்கள். நாமும் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருப்போம்.

ஓநாய் : ஓ! அப்படியா!

நாய் : வா நண்பா! என்னுடன் உன்னை அழைத்துச் செல்கிறேன்.

ஓநாய் : இல்லை. நீ ஊருக்குள் மனிதருடன் வாழப் பழகியிருக்கிறாய். நான் அப்படி அல்ல. காட்டில் வாழ்ந்து பழகி இருக்கிறேன். மனிதர்களுடன் நான் பழகியதில்லை.

நாய் : வந்தால் பழகிவிடும். வருகிறாயா? ஒவ்வொரு நாளும் ஓடி இரை தேட வேண்டாம்.

ஓநாய் : வீட்டில் வாழ்வதில் சில நன்மைகள் இருக்கின்றன. அதுபோல காட்டில் வாழ்வதிலும் சில நன்மைகள் இருக்கின்றன. நான் காட்டில் சுதந்திரமாக உலவுவதையே விரும்புகிறேன்.

நாய் : அதுவும் சரிதான். நான் மனிதர்களோடு நன்கு பழகிவிட்டேன். அவர்களைப் பிரிந்து இருக்கச் சொன்னால் என்னாலும் முடியாதே!

ஓநாய் : நல்லது நண்பா! அவ்வப்போது நீ காட்டுக்கு வா. நாம் சந்திக்கலாம். நேரம் கிடைக்கும் போது நானும் வருகிறேன்.

நாய் : ஓ! மிக்க மகிழ்ச்சி.



சிந்தித்துப் பேசலாமா?

விலங்குகள், பறவைகளின் இயல்புகள், தனித்திறமைகள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

எனக்குப் பிடித்த பறவை/ விலங்கு



3rd_Tamil_Term 2.indd 7 6/12/2025 1:14:13 PM

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. மகிழ்ச்சி இச்சொல் உணர்த்தும் பொருள் _____

(அ) இன்பம் (ஆ) துன்பம்

(இ) வருத்தம் (ஈ) அன்பு

2. அப்படி + ஆனால் இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

(அ) அப்படியானால் (ஆ) அப்படியனால்

இ) அப்படியினால் (ஈ) அப்படிஆனால்

3. பழகியிருக்கிறாய் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது. _____

(அ) பழகி + யிருக்கிறாய் (ஆ) பழகி + இருக்கிறாய்

(இ) பழ + இருக்கிறாய் (ஈ) பழகு + இருக்கிறாய்

4. பிரிந்து என்ற சொல்லின் எதிர்ச்சொல் _____

(அ) விலகி (ஆ) நகர்ந்து

(இ) சேர்ந்து (ஈ) சென்று

வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. ஓநாய் ஏன் மெலிந்து இருந்தது?

2. நாய், ஓநாயை எங்கு வரச் சொன்னது?

3. ஓநாய் எங்கு வாழ விரும்பியது?

3rd_Tamil_Term 2.indd 8 6/12/2025 1:14:14 PM

இன எழுத்துகள் அறிவோமா!


சங்கு


மஞ்சள்


பந்து


உண்டியல்


பம்பரம்


குன்று

சொற்களில் மெல்லின மெய் எழுத்திற்குப்பின் அதற்கு இனமான வல்லின வரிசை எழுத்துகள் இணைந்து வரும்.

எ.கா. ங்க என்ற மெல்லின மெய் எழுத்தைத் தொடர்ந்து ககர வரிசை எழுத்துகள் வரும். பொங்கல், வெங்காயம், வங்கி, நுங்கு, எங்கே, பூங்கொடி...

ங் – க்	ஞ் – ச்	ண் – ட்	ந் – த்	ம் – ப்	ன் – ற்

உயிரெழுத்துகளுக்கும் இன எழுத்துகள் உண்டு

ஆ – அ	ஈ – இ	ஊ – உ	ஏ – எ	ஓ – ஒ	ஐ – இ	ஔ – உ

இன எழுத்துகளை அடையாளம் கண்டு அடிக்கோடு இடுவேன்


செம்பருத்தி


கன்று


சுண்டல்


வண்டு


குரங்கு


இஞ்சி


ஆந்தை


கம்பு

3rd_Tamil_Term 2.indd 9 6/12/2025 1:14:14 PM

2 நூலகம்

மாமா... மாமா... என அழைத்தபடி தேனருவி வீட்டிற்குள் வந்தாள்.

மாமா : என்னம்மா தேனருவி! ஏன் இப்படி ஓடி வருகிறாய்?

தேனருவி : நான் பள்ளியிலிருந்து வரும் வழியில் உள்ள நூலகத்தில் தோரணம் கட்டியிருந்தார்கள். ஏன் மாமா?

மாமா : இன்று ஆகஸ்டு 12, 'நூலக தினம்'. அதைக் கொண்டாடுவதற்காக நூலகத்தை அழகுபடுத்தியிருப்பார்கள்.

தேனருவி : அப்படியா? நாமும் போகலாமா?

மாமா : சரி தேனருவி! வா போகலாம்.

தேனருவி : நூலகத்தைப் பற்றி எனக்கு விளக்கமாகச் சொல்லுங்கள்.

மாமா : சொல்கிறேன். 'நூல் + அகம் = நூலகம்'. நூலகத்தை நூல் நிலையம், புத்தகச் சாலை என்றும் கூறலாம்.

தேனருவி : மாமா அங்கு என்னென்ன நூல்கள் இருக்கும்?

மாமா : அங்கு நிறையப் புத்தகங்கள் உள்ளன. உங்களைப் போன்ற குழந்தைகளுக்குத் தனிப்பிரிவே இருக்கிறது. குழந்தைப்பாடல் நூல்கள், படக்கதைகள், கதைப் புத்தகங்கள், விளையாட்டு நூல்கள்,



3rd_Tamil_Term 2.indd 10 6/12/2025 1:14:15 PM

புதிர் நூல்கள், ஓவியம், பிற படைப்புகள் சார்ந்த நூல்கள் அங்கே இருக்கின்றன. அதுமட்டுமல்ல அனைவரும் படிப்பதற்கு ஏற்பப் பல்வேறு துறை சார்ந்த நூல்களும் இருக்கின்றன. நூல்கள் மட்டுமன்றி நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் ஆகியவையும் இடம்பெற்றிருக்கும்.

தேனருவி : நூலகத்தில் இவ்வளவு வகை நூல்களா? அது சரி மாமா... நூலகத்தினால் நமக்கு என்ன பயன்?

மாமா : ம்... நீ இவ்வளவு ஆர்வமாகக் கேட்கும்போது நான் சொல்லாமல் இருப்பேனா? இங்கு நமக்குத் தேவையான, பிடித்த நூல்களை எடுத்துப் படிக்கலாம். நூலகத்தில் உறுப்பினராகச் சேரலாம். அப்போது நூல்களை வீட்டிற்கே கொண்டு சென்றும் படிக்க முடியும். குறிப்பிட்ட நாளில் புத்தகங்களைத் திருப்பி அளித்துவிட வேண்டும்.

தேனருவி : மாமா! நூலகம் பற்றி நிறையச் செய்திகளைத் தெரிந்துகொண்டேன்.

மாமா : நானும் போட்டித் தேர்விற்காக இந்த நூலகத்தில்தான் நிறையப் புத்தகங்கள் படித்தேன்.


தேனருவி : அதனால்தான் நீங்கள் பெரிய பதவியில் இருப்பதாக அம்மா கூறியிருக்கிறார். இனி நானும் நூலகம் செல்வேன்.



சிந்தித்துப் பேசலாமா?

பள்ளி நூலகம், பொது நூலகம் போன்றவற்றைப் பயன்படுத்துதல் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

பொது நூலகம் / பள்ளி நூலகத்தில் எனக்குப் பிடித்த புத்தகம்



3rd_Tamil_Term 2.indd 11 6/12/2025 1:14:15 PM

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. நூல் இச்சொல் உணர்த்தும் பொருள் _____

   (அ) நூல் + அகம் (ஆ) நூல + அகம் (இ) நூ + அகம் (ஈ) நூல + கம்

2. நாள் + இதழ்கள் இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

   (அ) நாள்இதழ்கள் (ஆ) நாளிதழ்கள் (இ) நாளீதழ்கள் (ஈ) நாளிதழ்கல்

3. நூலகம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   (அ) நூல் + அகம் (ஆ) நூல + அகம் (இ) நூ + அகம் (ஈ) நூல + கம்

4. புத்தகச்சாலை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   (அ) புத்தக + சாலை (ஆ) புத்தகச் + சாலை

   (இ) புத்த + சாலை (ஈ) புத்தகம் + சாலை


5. விளக்கமாக இச்சொல்லின் எதிர்ச்சொல் _____

   (அ) விரிவாக (ஆ) தெளிவாக (இ) சுருக்கமாக (ஈ) சரியாக

வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. நூலகத்தின் வேறு பெயர்கள் யாவை?
2. நூலக தினமாகக் கொண்டாடப்படும் நாள் எது?
3. நூலகத்தில் இருந்த குழந்தைகளுக்கான நூல்கள் என்னென்ன?

அறிந்துகொள்வோம்





செயல்திட்டம்

அருகில் உள்ள பொதுநூலகத்தைப் பார்வையிட்டு அதுகுறித்து வகுப்பறையில் பகிர்க.

3rd_Tamil_Term 2.indd 12 6/12/2025 1:14:15 PM

பதிலிப்பெயர்கள் அறிவோமா!

பெயர்ச் சொற்கள் அடுத்தடுத்த தொடர்களில் மீண்டும் இடம்பெறும்போது அந்தப் பெயர்ச் சொற்களையே பயன்படுத்தாமல் அவற்றிற்குப் பதிலாகப் பயன்படுத்தும் சொற்கள் பதிலிப்பெயர்கள் ஆகும். (பெயர்ச் சொற்களுக்கு மாற்றாகப் பயன்படும்)

கலை வந்தாள். கலை புத்தகம் படித்தாள்.	கலை வந்தாள். அவள் புத்தகம் படித்தாள்.
அமுதன் கடைக்குச் சென்றான். அமுதன் பழம் வாங்கினான்.	அமுதன் கடைக்குச் சென்றான். அவன் பழம் வாங்கினான்.
நாய் என்னைப் பார்த்தது. நாய் வாலை ஆட்டியது.	நாய் என்னைப் பார்த்தது. அது வாலை ஆட்டியது.
ஆடுகள் வந்தன. ஆடுகள் தண்ணீர் குடித்தன.	ஆடுகள் வந்தன. அவை தண்ணீர் குடித்தன.
மீனாவும் ரஹீமும் நண்பர்கள். மீனாவும் ரஹீமும் விளையாடினர்.	மீனாவும் ரஹீமும் நண்பர்கள். அவர்கள் விளையாடினர்.

பதிலிப் பெயர்கள்

அவன், அவள், அது, அவை, அவர்கள், இவன், இவள், இது, இவை, இவர்கள்

வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருத்தமான பதிலிப் பெயர்களால் நிரப்புவேன்

அவன், அவள், அது, அவை, அவர்கள்

1. வளர்மதி காலையில் எழுந்தாள். _____ பல் துலக்கினாள்.
2. ஆதவன் நன்றாக விளையாடினான். _____ வெற்றி பெற்றான்.
3. மாடு வயல்வெளிக்குச் சென்றது. _____ அங்குப் புல் மேய்ந்தது.
4. புறாக்கள் பறந்து வந்தன. _____ மரத்தில் அமர்ந்தன.
5. அனிதாவும் ஆனந்தும் நண்பர்கள். _____ பந்து விளையாடினர்.

3rd_Tamil_Term 2.indd 13 6/12/2025 1:14:15 PM

3 தூக்கணாங்குருவியும் ஒட்டகச்சிவிங்கியும்

காட்டில் உள்ள மரத்தில் தூக்கணாங்குருவி கூடு கட்டி இருந்தது. அதில் தூக்கணாங்குருவியும் அதன் குஞ்சுகளும் வாழ்ந்து வந்தன. குஞ்சுகள் கீச்... கீச்... என்று மகிழ்ச்சியுடன் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன. அங்கு ஒட்டகச்சிவிங்கி ஒன்று வந்தது.

ஒட்டகச்சிவிங்கி : அப்பாடா, வயிறு நிறைந்துவிட்டது. இந்த மர நிழலில் தூங்கலாம். ஏய்... குருவிக்குஞ்சுகளே... சத்தம் போடாதீர்கள். நான் தூங்க வேண்டும்.

(குருவிக் குஞ்சுகள் மகிழ்ச்சியாக ஒலி எழுப்பிக்கொண்டே இருந்தன. கோபம் கொண்ட ஒட்டகச்சிவிங்கி மரக்கிளையை உலுக்கியது.)

தூக்கணாங்குருவி : ஒட்டகச்சிவிங்கியே! ஏன் கிளையை உலுக்குகிறாய்? கூட்டில் குஞ்சுகள் பயப்படுகின்றன.

ஒட்டகச்சிவிங்கி : உன் குஞ்சுகள் சத்தமிடுவது எனக்குப் பிடிக்கவில்லை.

(மீண்டும் கிளையை வேகமாக ஒட்டகச்சிவிங்கி உலுக்கியது. செய்வது அறியாமல் தூக்கணாங்குருவி தவித்தது. நண்பன் தவளையிடம் தன் நிலையைக் கூறியது.)

தவளை : ஆமாம். அந்த ஒட்டகச்சிவிங்கி பிறரைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. அது தண்ணீர் குடிக்க வரும்போது எங்களையும் மிதிப்பதுண்டு.

(அருகிலிருந்த தேனீ இதைக் கேட்டது.)



3rd_Tamil_Term 2.indd 14 6/12/2025 1:14:16 PM

தேனீ : எங்களின் தேன்கூடு பக்கத்து மரக்கிளையில் உள்ளது. அதையும் இப்படித்தான் அடிக்கடி ஆட்டும். இனி இதை விடக்கூடாது.

(தூக்கணாங்குருவி, தவளை, தேனீ மூன்றும் சேர்ந்து ஒரு திட்டம் தீட்டின. அதன்படி தவளையும் அதன் நண்பர்களும் ஆங்காங்கே ஒளிந்து கொண்டார்கள். தேனீயும் குருவியும் தங்கள் நண்பர்களை அழைத்து வந்தன. அனைத்தும் சத்தமில்லாமல் ஒட்டகச்சிவிங்கியைச் சுற்றி வட்டமிட்டன.


குருவி சைகை காட்டியவுடன் தவளைகள் கர்ரக்... கர்ரக்..., தேனீக்கள் ஙைங்ங்... ஙைங்ங்..., குருவிகள் கீச்... கீச்... என ஒலிகளை எழுப்பின. தொடர்ந்து ஒலி எழுப்பிக்கொண்டே இருந்தன. ஒட்டகச்சிவிங்கியால் அதைப் பொறுத்துக்கொள்ளவும் முடியவில்லை; தடுக்கவும் முடியவில்லை.)

ஒட்டகச்சிவிங்கி : ஆஆ... ஏன் என்னை இப்படித் தொல்லை செய்கிறீர்கள்?

தேனீ : நீயும் இப்படித்தானே எங்களை அடிக்கடி தொல்லை செய்கிறாய்.

ஒட்டகச்சிவிங்கி : இனி நான் யாரையும் தொல்லை செய்ய மாட்டேன். நீங்களும் எனக்குத் தொல்லை தர வேண்டாம்.

(அதைக்கேட்டு அனைத்தும் மகிழ்ந்தன.)





சிந்தித்துப் பேசலாமா?

பிறருக்குத் தீங்கு செய்வது தவறு என்பது குறித்துக் கலந்துரையாடுங்கள்.

நான் செய்த நல்ல செயல்கள்



3rd_Tamil_Term 2.indd 15 6/12/2025 1:14:16 PM

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. சத்தம் + இல்லாமல் இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

   (அ) சத்தம்இல்லாமல் (ஆ) சத்தம்மில்லாமல்

   (இ) சத்தஇல்லாமல் (ஈ) சத்தமில்லாமல்

2. மரக்கிளை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   (அ) மரம் + கிளை (ஆ) மர + கிளை

   (இ) மரத்து + கிளை (ஈ) மரக் + கிளை

3. மிதிப்பதுண்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   (அ) மிதிப்பது + உண்டு (ஆ) மிதிப்ப + துண்டு

   (இ) மிதிப்ப + உண்டு (ஈ) மிதி + துண்டு

4. சேர்ந்து என்ற சொல்லின் எதிர்ச்சொல் _____

   (அ) மகிழ்ந்து (ஆ) பிரிந்து

   (இ) இணைந்து (ஈ) சிறந்து

5. மரக்கிளையை உலுக்கியது _____

   (அ) தேனீ (ஆ) ஒட்டகச்சிவிங்கி

   (இ) தவளை (ஈ) சிட்டுக்குருவி

வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. தூக்கணாங்குருவிக்கு எவையெல்லாம் உதவி செய்தன?

2. கதையில், பிறரை அடிக்கடி தொல்லைகள் செய்தது எது?

3. ஒட்டகச்சிவிங்கி இறுதியில் என்ன கூறியது?

3rd_Tamil_Term 2.indd 16 6/12/2025 1:14:16 PM

ஒலிகள் அறிவோமா!

பெயர்களையும் எழுப்பும் ஒலிகளையும் இணைத்துப் படிப்போம்; எழுதுவோம்



அணில் கீச்சிடும்

3rd_Tamil_Term 2.indd 17 6/12/2025 1:14:16 PM

4 ஏன்? ஏன்?



கொழுக்கட்டை கொழுக்கட்டை ஏன் வேகல?
அடுப்பு எரியல நான் வேகல

அடுப்பே அடுப்பே ஏன் எரியல?
மழை பெய்ஞ்சது நான் எரியல

மழையே மழையே ஏன் பெய்ஞ்ச?
புல்லு வளர நான் பெய்ஞ்சேன்

புல்லே புல்லே ஏன் வளர்ந்த?
மாடு தின்ன நான் வளர்ந்தேன்

மாடே மாடே ஏன் தின்ன?
பாலு சுரக்க நான் தின்னேன்

பாலே பாலே ஏன் சுரந்த?
குழந்தை அழுதது நான் சுரந்தேன்

குழந்தையே குழந்தையே ஏன் அழுத?
எறும்பு கடிச்சது நான் அழுதேன்

எறும்பே எறும்பே ஏன் கடிச்ச?
என் புத்துக்குள்ள கைய விட்டா
நான் சும்மா இருப்பேனா?


– நாட்டுப்புறப் பாடல்



சிந்தித்துப் பேசலாமா?

பேசுவது போன்றே எழுதுவோமா? எழுதுவது போன்றே பேசுவோமா? என்பது குறித்துக் கலந்துரையாடுங்கள்.

எனக்குப் பிடித்த கதை.



3rd_Tamil_Term 2.indd 18 6/12/2025 1:14:19 PM

பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு அறிவோமா!

வேகல	–	வேகவில்லை
பெய்ஞ்சுது	–	பெய்தது
எரியல	–	எரியவில்லை
புல்லு	–	புல்
பாலு	–	பால்
புத்து	–	புற்று
தின்னேன்	–	தின்றேன்
கடிச்சது	–	கடித்தது

பயிற்சி

எழுத்து வழக்குச் சொற்களுக்கு ✓ குறியிடுவேன்

பாம்புப்புத்து		பட்டம் பறக்கிறது	
பாம்புப்புற்று	✓	பட்டம் பறக்குது	
பூனை ஓடியது		தண்ணீர் குடிச்சான்	
பூனை ஓடுச்சு		தண்ணீர் குடித்தான்	
அப்பளம் உடைஞ்சது		கை வலித்தது	
அப்பளம் உடைந்தது		கை வலிச்சுது	

செயல்திட்டம்




அன்றாடம் பயன்படுத்தும் சொற்களுள் பேச்சு வழக்குக்கு உரிய எழுத்து வழக்குச் சொற்கள் தொகுப்பினைத் தயார் செய்க. (எவையேனும் பத்து)

3rd_Tamil_Term 2.indd 19 6/12/2025 1:14:19 PM

5 ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

காட்டில் மரங்களுக்கும் விலங்குகளுக்கும் ஒரு போட்டி நடந்தது.



3rd_Tamil_Term 2.indd 20 6/12/2025 1:14:20 PM















எல்லா உயிரினங்களுக்கும் வாழ்வதற்கான உரிமை உண்டு. கலந்துரையாடுங்கள்.

ஒற்றுமையே வலிமை



3rd_Tamil_Term 2.indd 21 6/12/2025 1:14:21 PM

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. வேட்டை+ ஆட இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

(அ) வேட்டையட (ஆ) வேட்டையாட

(இ) வேட்டைஆடு (ஈ) வெட்டையாட

2. உயர்வு இச்சொல்லின் எதிர்ச்சொல் _____

(அ) பணிவு (ஆ) கனிவு

(இ) தாழ்வு (ஈ) துணிவு

3. ஏற்றுக்கொள்கிறோம் என்று கூறியது யார்? _____

(அ) மரங்கள் (ஆ) விலங்குகள்

(இ) பறவைகள் (ஈ) மனிதர்கள்

4. 'எந்த உணவும் கிடைக்கவில்லை' என்று கூறியது _____

(அ) சிங்கம் (ஆ) புலி

(இ) முயல் (ஈ) மான்

வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. மரங்கள் எவற்றுடன் சண்டையிட்டன?

2. காட்டைவிட்டு வெளியேறியவை எவை?

3. மரங்களும் விலங்குகளும் செய்துகொண்ட ஒப்பந்தம் என்ன?

4. கதையின்மூலம் நீ என்ன தெரிந்து கொண்டாய்?

வண்ணத்தில் வேறுபட்ட எழுத்துகளைச் சேர்ப்போம்; கிடைக்கும் சொல்லை எழுதுவோம்

பள்ளம்	அரும்பு	பார்த்திபன்	பருத்தி
பருந்து	வட்டம்	வண்டு	_____
கம்பு	பம்பரம்	தக்காளி	_____

3rd_Tamil_Term 2.indd 22 6/12/2025 1:14:21 PM

உரிய சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புவோம்




மலை / மழை

_____ பெய்தது.

_____ உயரமானது.




வாள் / வால்

மரத்தை அறுப்பது _____

மாட்டுக்கு இருப்பது _____




புலி / புளி

மரத்தில் காய்ப்பது _____

காட்டில் வாழ்வது _____

இலைகளில் உருவம் செய்து மகிழ்வோம்





3rd_Tamil_Term 2.indd 23 6/12/2025 1:14:22 PM

6 திருக்குறள் கதைகள்

அன்பு என்னும் அருங்குணம்



ஒரு காட்டில் பெரிய மரம் ஒன்று இருந்தது. அம்மரத்தில் பறவைகளும் விலங்குகளும் வாழ்ந்து வந்தன. அங்கு இருந்த கரடி மட்டும் சேட்டைகள் பல செய்து வந்தது. பறவையின் கூட்டை எட்டிப்பார்க்கும். குஞ்சுகள் என்றும் பாராமல் "இதோ உங்களைத் தூக்கி எறிகிறேன் பாருங்கள்" என்று கூட்டைப் பிய்த்து எறியும். குரங்குகள் வந்தால் தங்கவே இடம் தராமல் துரத்திவிடும். சில நேரங்களில் குட்டிக் குரங்குகளின் தலையில் குட்டு வைக்கும். தலை வீங்கி அவை அழுவதைப் பார்த்துச் சிரிக்கும். இவ்வாறு யாரிடமும் அன்பு காட்டாமல் வெறுப்புடனே நடந்து கொள்ளும். அதனால் பறவைகளும் குரங்குகளும் வேறு மரத்திற்கே சென்றுவிட்டன. ஒரு முறை வேடன் ஒருவர் விரித்து வைத்திருந்த வலையில் எதிர்பாராமல் கரடி சிக்கிக்கொண்டது. அது காடே அதிரும் வகையில் சத்தமிட்டு அலறியது. வலையிலிருந்து தன்னைக் காப்பாற்றும்படி கதறியது. ஆனால், ஒருவரையும் காணோம். தான் யாரிடமும் அன்பு காட்டாமல் இருந்ததுதான் இந்த நிலைமைக்குக் காரணம் என்பதை உணர்ந்தது. ஓவென்று அழுதது. கரடியின் சத்தம் கேட்டு வந்த பறவைகள், வேடனைக் கொத்திக் கொத்தித் துரத்தின. குரங்குகள் வலையைப் பிய்த்துக் கரடியைக் காப்பாற்றின. அன்றுமுதல் கரடி எல்லாரிடமும் அன்பு செலுத்தத் தொடங்கியது.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

இன்னா செய்யாமை, குறள் 314

சொல்லும் பொருளும் : இன்னா – துன்பம்
நாணுதல் – வெட்கப்படுதல்
ஒறுத்தல் – தண்டித்தல்

விளக்கம் : துன்பம் செய்தவரைத் தண்டித்தல் என்பது, அவர்தம் செய்கையை நினைத்து அவரே வெட்கப்படும்படியாக அவருக்கு நன்மைகளைச் செய்தல் ஆகும்.

3rd_Tamil_Term 2.indd 24 6/12/2025 1:14:22 PM

கல்வியே நமது செல்வம்



அந்த ஊரில் பெருவெள்ளம். மக்கள் தங்கள் உடைமைகளை இழந்து வாடினர். மிகப்பெரும் செல்வந்தர் ஒருவர் எல்லாச் சொத்துகளையும் இழந்துவிட்டார். இனி என்ன செய்வது என்று கலங்கினார். தன் மகனிடம் "எவ்வளவு சொத்துகளைச் சேர்த்து வைத்திருந்தேன். அவையெல்லாம் இன்று நம்மை விட்டுப் போய்விட்டதே இனி எப்படி வாழ்வது? எல்லாம் இழந்துவிட்டேன் எனக்கு வாழவே பிடிக்கவில்லை" என்று வருந்திப் புலம்பினார்.

அப்பா வருந்திக் கூறியதைக் கேட்டான் மகன். "அப்பா நீங்கள் சேர்த்து வைத்த செல்வங்களில் சிறந்த செல்வம் எனக்குக் கொடுத்த கல்விதான். அது இந்த வெள்ளத்தில் அழியவில்லை. கல்வியை எதனாலும் அழிக்கவும் இயலாது. இந்தக் கல்வியைக் கொண்டே இழந்த செல்வங்களையும் மீண்டும் சேர்க்க முடியும். கவலை வேண்டாம் எழுந்து வாருங்கள் அப்பா, கற்ற கல்வி நம்மைக் கைவிடாது என்றார்.

மகன் பேசியதைக் கேட்டதும் அவருக்குப் புத்துணர்வு ஏற்பட்டது. "ஆமாம் கல்வியே அழியாத செல்வம். அதுவே கெடுதல் இல்லாத சிறந்த செல்வமும்கூட" என்று கூறி நம்பிக்கையுடன் எழுந்தார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

கல்வி, குறள் 400

சொல்லும் பொருளும் : கேடில் – அழிவு இல்லாத

மாடு – செல்வம்

விளக்கம் : ஒருவருடைய நிலைத்த செல்வம் என்பது அவர் கற்ற கல்வியே ஆகும். அதனைத் தவிர வேறு எந்தச் செல்வமும் நீடித்து இருக்காது.

3rd_Tamil_Term 2.indd 25 6/12/2025 1:14:22 PM

ஆசிரியர் குறிப்பு

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறள் எக்காலத்துக்கும் ஏற்ற அறவுரைக் கருத்துகளைக் கொண்டுள்ளது. இந்நூலில் அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகள் உள்ளன. 133 அதிகாரங்களும் அதிகாரத்திற்குப் பத்துக் குறள்களாக 1330 குறட்பாக்களும் உள்ளன.

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. ஒறுத்தல் இச்சொல்லின் பொருள் _____

   (அ) கேட்டல் (ஆ) மன்னித்தல்

   (இ) சிரித்தல் (ஈ) தண்டித்தல்

2. நன்னயம் என்ற சொல்லின் பொருள் _____

   (அ) நன்மையைச் செய்தல் (ஆ) ஒறுத்தல்

   (இ) நாணுதல் (ஈ) இன்னா செய்தல்

3. துன்பம் இச்சொல்லின் எதிர்ச்சொல் _____

   (அ) இன்பம் (ஆ) அன்பு

   (இ) நட்பு (ஈ) ஈகை

4. ஒருவருடைய நிறைந்த செல்வம் _____

   (அ) பணம் (ஆ) வீடு

   (இ) கல்வி (ஈ) ஆபரணம்

குறட்பாவுக்குப் பொருத்தமான தொடரை எடுத்து எழுதுவேன்

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை.

_____

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்.

_____


- தீமை செய்தவருக்கும் நன்மை செய்தல்.
- காலம் அறிந்து செயல்படுதல்.
- கல்வியே அழியாத செல்வம்.
- நடுநிலைமையோடு செயல்படுதல்.

3rd_Tamil_Term 2.indd 26 6/12/2025 1:14:22 PM

வந்த பாதை

படித்து மகிழ்வோம்











கண்டுபிடித்து எழுதுவோம்

பெயரில் மரம் உள்ள பறவை	
பொங்கும் உணவு	
பெயரில் மை உள்ள தானியம்	
பெயரில் கை உள்ள பூ	






3rd_Tamil_Term 2.indd 27 6/12/2025 1:14:23 PM

படிப்போம்; தொடர்ந்து எழுதுவோம்

அங்கே பார்! இங்கே பார்!
என்ன நடக்குது?
நாயைப் பார்! நாயைப் பார்!
குரைத்துக் காட்டுது!.





அங்கே பார்! இங்கே பார்!
என்ன நடக்குது?
வாத்தைப் பார்! வாத்தைப் பார்!

_____


அங்கே பார்! இங்கே பார்!
என்ன நடக்குது?

_____

_____



படிப்போம்; எழுதுவோம்



வேண்டாம்வேண்டாம்
சோறு வேண்டாம்
வேண்டும் வேண்டும்
பழம் வேண்டும்!

வேண்டாம் வேண்டாம்
பாயசம் வேண்டாம்
வேண்டும் வேண்டும்
கரும்பு வேண்டும்!



_____

_____

_____

_____



3rd_Tamil_Term 2.indd 28 6/12/2025 1:14:24 PM

தொடர் உருவாக்கி எழுதுவேன்

மேகம்
காற்று
மழை



காகம்
தாகம்
தண்ணீர்



மேகம் கருத்தது _____ . _____ .

காற்று வீசியது _____ . _____ .

மழை பெய்தது _____ . _____ .

தாவரங்களின் பெயர் எழுதுவோம்

மாமரம்	தென்னைமரம்	பூசணிக்கொடி	பப்பாளிமரம்
ஆலமரம்	கத்தரிச்செடி	புடலைக்கொடி	மிளகாய்ச்செடி
பாகற்கொடி	தக்காளிச்செடி	திராட்சைக்கொடி	வெண்டைச்செடி














3rd_Tamil_Term 2.indd 29 6/12/2025 1:14:26 PM

தொடர்களைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்போம்

டேவிட் கதைப் புத்தகம் வாங்கினான். அதில் படங்களைப் பார்த்தான்.

டேவிட் என்ன செய்தான்?

அ) கதை படித்தான் ஆ) படங்களைப் பார்த்தான் இ) படங்கள் வரைந்தான்

◯ ◯ ◯

ஆதவன் தோட்டத்திற்குச் சென்றார். செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றினார்.

1. தோட்டத்திற்குச் சென்றவர் யார்?

2. தோட்டத்தில் என்ன செய்தார்?

பரீனா கண்ணாடிக் குவளையை எடுத்தாள். அதில் நீர் ஊற்றினாள். குச்சியால் தட்டினாள். இசை எழுந்தது.

1. இசை எழுப்பியவர் யார்?

2. பரீனா எதில் நீர் ஊற்றினாள்?

எறும்புகள் வந்தன. அரிசியைக் கண்டன. தூக்கிச் சென்றன. சுவைத்துத் தின்றன.

1. அரிசியைக் கண்டவை எவை?

2. எறும்புகள் அரிசியை எதற்கு எடுத்துச் சென்றன?

மேரி ஓவியம் வரைந்தார். அதை மகிழினிக்குப் பரிசாகக் கொடுத்தார்.

1. மேரி என்ன செய்தார்?

2. மேரி யாருக்குப் பரிசு கொடுத்தார்?

3rd_Tamil_Term 2.indd 30 6/12/2025 1:14:26 PM

என் பக்கம்

நான் உருவாக்கிய கதை / பாடல்










எனக்குப் பிடித்த நாள்

_____ / _____ / _____

ஏன் என்றால்...

நான் செய்த உதவி

3rd_Tamil_Term 2.indd 31 6/12/2025 1:14:28 PM

அகரமுதலி

1)	இரை	–	உணவு
2)	ஒலி	–	சத்தம்
3)	சுதந்திரம்	–	விடுதலை
4)	நூல்	–	புத்தகம்
5)	மெலிந்து	–	இளைத்து
6)	இன்னா	–	துன்பம்



3rd_Tamil_Term 2.indd 32 6/12/2025 1:14:31 PM

கற்றல் விளைவுகள்

கேட்டல்	பேசுதல்	படித்தல்	எழுதுதல்
• கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களையும் கதைகளையும் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொள்வர். அவற்றின் மீதான கருத்தினை, நோக்கினை வெளிப்படுத்துவர். • தம்மைச்சுற்றி நடைபெறும் உரையாடல்களையும் விவரிப்புகளையும் கேட்டு எதிர்வினையாற்றுவர். • வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்வர்.	• பண்புடன் உரையாடுவர். • பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுவர். • தமக்கு அறிமுகமான செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும் தங்குதடையின்றியும் விவரித்துக் கூறுவர். • கேட்கும்/படிக்கும் கதை, கவிதை, செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துவர்.	• தெளிவான ஒலிப்புடன் குறில் – நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படிப்பர். • முற்றுப்புள்ளி, வினாக்குறி ஆகிய நிறுத்தக்குறிகளை அறிந்து படிப்பர். • எளிய தொடர்களைத் தங்குதடையின்றிப் படிப்பர். • படிக்கும் பகுதியில் இடம்பெறும் புதிய சொற்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொண்டு அவற்றின் சரியான பொருளை அறிந்துகொள்ள முயற்சி செய்வர். • படிக்கும் பகுதியில் இடம்பெறும் பெயர்ச்சொல், வினைச்சொல் பதிலிப் பெயர்ச்சொல் போன்ற நுட்பங்களைப் புரிந்து படிப்பர்.	• புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுவர். • சொற்கள் /தொடர்கள்/ செய்தி/ கதைப்பகுதி / கதை / இதழ் / பாடல் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து, கருத்து தெரிவிப்பர். கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவர். • அறிந்த சொற்களைக் கொண்டு, தமக்கான நடையில், நிறுத்தக்குறிகள், எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு தொடர்கள் எழுதுவர்.

நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்	கற்கக் கற்கும் திறன்கள் (தானே கற்றல்)	சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும்
• இன எழுத்துகளை அறிந்துகொள்வர். • பதிலிப் பெயர்ச் சொற்கள் அறிந்து பயன்படுத்துவர். • ஒத்த ஓசைச் சொற்கள் அறிந்து பயன்படுத்துவர். • மயங்கொலிச்சொற்களின்வேறுபாடு அறிந்து பயன்படுத்துவர்.	• சிறுவர்களுக்கான பெரிய எழுத்து படக்கதைகளைப் படித்து மகிழ்வர். • கணினியில் குழந்தைகளுக்கான புதிர்கள்,மொழிவிளையாட்டுகளை விளையாடி மகிழ்வர்.	கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர். • உணவுப் பொருள்களின் பெயர்கள் • பொது இடங்களின் பெயர்கள் (பள்ளி, வங்கி, பேருந்து நிலையம், மருத்துவமனை...) • மரம், செடி கொடிகளின் பெயர்கள் • பழமொழிகள், மரபுத் தொடர்கள் • பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு வேறுபாடு

படைப்புத் திறன்கள்	விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுதல்	வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுதல்
• சொல் விளையாட்டுகளில் பங்கேற்பர். • பாடலைப் படித்துப் புரிந்துகொண்டு புதிய தொடர்களை / பாடல் வரிகளை உருவாக்குவர். • ஒரே எழுத்தில் தொடங்கும், முடியும் பல்வேறு சொற்களை உருவாக்க அறிந்துகொள்வர். • கதையைத் தொடர்ந்து கூறிமுடிப்பர்.	• தூய்மை பேணுதல் • விதிகளைப் பின்பற்றுதல் • பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் • உண்மை பேசுதல் • நட்புணர்வு போன்ற பண்புகளைப் பின்பற்றுவர்.	• தன்னை அறியும் திறன் • சிக்கல் தீர்க்கும் திறன் • முடிவெடுக்கும் திறன் • கூர்சிந்தனைத் திறன் • படைப்பாக்கச் சிந்தனைத்திறன் • சிறந்த தகவல் தொடர்புத் திறன் • இணக்கமான உறவுக்கான திறன்கள் • பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன் • உணர்வுகளைக் கையாளும் திறன் • மன அழுத்தத்தைக் கையாளும் திறன் போன்றவற்றை உணர்ந்தறிந்து செயல்படுவர்.

3rd_Tamil_Term 2.indd 33 6/12/2025 1:14:31 PM

தமிழ் – மூன்றாம் வகுப்பு

நூல் ஆக்கம்

கல்வி ஆலோசகர்

முனைவர். பொன். குமார்
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

மேலாய்வாளர்கள்

திருமதி ஆ.சே.பத்மாவதி,எழுத்தாளர்,
சென்னை.

திருமதி பா. மலர்விழி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர்.

திரு சி. பன்னீர்செல்வம்,
கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை.

திரு இல. சீனிவாசன், முதுகலை ஆசிரியர்,
மஜ்ஹருல் உலும் மேனிலைப்பள்ளி,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர். கா.சா. மொழியரசி, முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

திரு ந. இராமலிங்கம், உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவனம், சென்னை

தே.விமலா தேவி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

பக்க வடிவமைப்பு

சந்தோஷ்குமார் சக்திவேல்

வரைபடம்

கா. தனஸ் தீபக் ராஜன்
கா. நலன் நான்சி ராஜன்
ரா.ஷாலினி
வை.மை.பிராங்க் டஃப்
மதன் கங்காதரன்
பா. ரவிகுமார்,
வேல்முருகன்
பா. பிரமோத்
செ. ரமேஷ்குமார்.

தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன்

கி. ஜெரால்டு வில்சன், அருண் காமராஜ்

காமாட்சிபாலன் ஆறுமுகம்

பாடநூல் உருவாக்கக் குழு

திருமதி அர. அனுசுயா தேவி, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையாம்பாளையம்,
விழுப்புரம் மாவட்டம்.

திருமதி பெ. முருகராணி, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, மருவத்தூர்,
பெரம்பலூர் மாவட்டம்.

திருமதி க. மல்லிகா, தலைமை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர்,
